**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம், இராமநாதபுரம்**
**(கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்)**

**முன்னிலை: திரு. C. மோகன்ராம், M.A., B.L.,**
**விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள் வியாழக்கிழமை**

**M.C.O.P. No.15/2023**
**(CNR No.TNRM01 000020 2023)**

1. அபுல்கலாம், வயது சுமார் 52, த/பெ.ஜமால் முகமது, கதவு எண்.6/776, ரமலான் தெரு, நடுத்தெரு, வழுதூர், வாலாந்தரவை, இராமநாதபுரம் மாவட்டம்.

2. சுலைகா ஷாஜஹான், வயது சுமார் 43, க/பெ.அபுல்கலாம், கதவு எண்.6/776, ரமலான் தெரு, நடுத்தெரு, வழுதூர், வாலாந்தரவை, இராமநாதபுரம் மாவட்டம்.

... மனுதாரர்கள்

/எதிர்/

1. வீரமணி, த/பெ. திருலூர், கதவு எண்.2/175, திருப்பத்தூர் தாலுகா, சின்னானுடைய முத்தூர், திருப்பத்தூர் தாலுகா, வேலூர் மாவட்டம்

2. அசிஸ்டென்ட் லீகல் மேனேஜர், நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட், BSNL எக்சேஞ்ச் 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை.

3. பகது ராஜா, த/பெ.பஹருதீன், கதவு எண்.2/21, காயிதே மில்லத் தெரு, பெரியபட்டிணம், இராமநாதபுரம் மாவட்டம்

4. Assistant Legal Manager, ICICI Lombard General Insurance Company, ICICI Lambard House, 414 Veer Savarkar Marg Near Siddi Vinayagar Temple Prabhadevi Madurai.

... எதிர்மனுதாரர்கள்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:22:57 +0530

மனு தாக்கலான நாள் – 02.01.2023

மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் – 19.01.2023

இம்மனு 16.06.2026 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.முத்துதுரைச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.தர்மராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்தும், இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்...

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்கள் கடந்த 08.08.2021ம் தேதி இரவு சுமார் 11.50 மணியளவில் நடந்த விபத்தில் காயமுற்று இறந்துபோன நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீனுக்கு பெற்றோர்கள் என்ற முறையில் ரூ.1,50,00,000/- இழப்பீடு கேட்டு மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவுகள் 140, 141, 142, 163(பி), 166 மற்றும் 182(ஏ) உ/இ விதி 3(1) திருத்தப்பட்ட சட்டம் 54/1994 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் மனுதார்கள் மனுவில் கோரியவாறு இழப்பீடு தொகை பெற அருகதை உடையவர்களா என்பதாகும்.**

**3. <u>விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம்:</u>**

மனுதார்கள் தரப்பில் 1ம் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்து 19 ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். மனுதாரர்கள் தங்களுக்கு ஆதரவாக

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:04 +0530

முகம்மது யூசுப் என்ற 3ம் தரப்பினரை ம.சா.2 ஆக விசாரித்துள்ளனர். 1ம் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்கும் விதமாக தனது சாட்சியத்தில் தனது மகன் நிஜாமுதீன் கடந்த 08.08.2021ம் தேதி துபாயிலிருந்து மதுரைக்கு விமானத்தில் வந்து 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 65 AL 0099 MG Hector காரில் மதுரையிலிருந்து தங்கள் ஊரான வழுதூருக்கு வரும்போது மதுரை – இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நான்குவழிச் சாலையில் பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் செல்லும் சாலையில் மேம்பாலத்திற்கு அருகில் இரவு 11.50 மணிக்கு வந்து கொண்டிருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் தனக்குச் சொந்தமான TN 24 C 8989 Ashok Leyland என்ற கனரக வாகனத்தை அஜாக்கிரதையாகவும், கவனக் குறைவாகவும் நிறுத்தி வைத்திருந்ததால் 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 24 C 8989 என்ற கனரக வாகனத்தின் பின்புறமாக மோதியதில் தன் மகன் நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீனுக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது அங்கு பணியில் இருந்த மருத்துவர் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

**4.** விபத்து குறித்து 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது குற்ற எண்.216/2021 சட்டப்பிரிவுகள் 279, 304(ஏ)இதச–வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு பரமக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும் தன்னுடைய மகன் இறப்பிற்கு 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய கன ரக வாகனமான TN 24 C 8989 என்ற டிப்பர் லாரியை சாலை விதிகளை கடைப்பிடித்து முறையாக நிறுத்தவில்லை என்பதாலும் 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் கவனமாகவும், முறையான சாலைவிதிகளை கடைப்பிடித்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றும் விபத்திற்கு 1, 3

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:09 +0530

எதிர்மனுதாரர்களின் ஓட்டுநர்கள் காரணம் என்று தன்னுடைய சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். அதற்கு ஆதரவாக 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்ப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார்.

**5.** மேலும் பரமக்குடி நகர் காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக இருந்து பரமக்குடி தாலுகா ஆய்வாளர் தன்னுடைய புலன் விசாரணையின்போது தயார் செய்த பார்வை மகசர், வரைபடம், சடலக்கூராய்வு அறிக்கை, விபத்து வாகனத்தின் ஆய்வறிக்கை ஆகியவற்றை ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்துள்ளார். மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.2 முகம்மது யூசுப் தனது சாட்சியத்தில் கடந்த 09.08.2021ம் தேதி இரவு 10.15 மணியளவில் பரமக்குடியிலிருந்து திருவரங்கம் அருகில் உள்ள அலங்காநல்லூர் கிராமத்திற்கு சவாரி இறக்கிவிட்டு இரவு சுமார் 11.50 மணியளவில் மதுரை – இராமநாதபுரம் நான்குவழிச் சாலையில் முதுகுளத்தூர் மேம்பாலம் ஏற்றம் அருகே வரும்போது TN 24 C 8989 என்ற லாரி தனக்கு முன்னால் எவ்வித சிக்னலும் ஒளிவிளக்கும் இல்லாமல் முந்திச் சென்றபோது TN 65 AL 0099 MG Hector என்ற காரை ஓட்டி வந்த ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து லாரியின் பின்புறம் மோதிவிட்டார் என்றும் லாரி மீது கார் மோதியதில் வழுதூரைச் சேர்ந்த அபுல்கலாம் மகன் நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீனுக்கு காயங்கள் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள முகம்மது யூசுப் சாட்சியத்திலிருந்து முன்னால் சென்றுகொண்டிருந்த லாரியின் மீது பின்னால் சென்ற 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான கார் மோதியுள்ளது என்பதை இத்தீர்ப்பாயம் அறிந்து கொள்ள முடிகிறது. ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:15 +0530

வரைபடத்தை பரிசீலிக்கையில் மதுரை – இராமநாதபுரம் செல்லும் நான்கு வழிச்சாலையின் வடக்குப்புறம் விபத்து நடந்துள்ளது என்பதை இத்தீர்ப்பாயம் அறிய முடிகிறது. அலங்காநல்லூருக்கு சவாரி சென்ற ம.சா.2 முகம்மது யூசுப் அவர் கூறுவதுபோல் சவாரிக்கு சென்றுவிட்டு திரும்பிச் செல்லும்போது அவர் இராமநாதபுரத்திலிருந்து மதுரை செல்லும் நான்குவழிச் சாலையில் மட்டுமே வந்திருக்க வாய்ப்பு உள்ளது. எனவே தனக்கு முன்னால் சென்ற லாரியின் மீது 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான கார் ஓட்டுநர் லாரியின் பின்னால் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்பது நம்பும்படி இல்லை. ம.சா.2 முகம்மது யூசுப்பின் சாட்சியத்திலிருந்து அவர் சம்பவத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பு இல்லை. சம்பவத்தை பார்த்த ஒரு சாட்சி வேண்டும் என்பதற்காக ம.சா.2 மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார் என இத்தீர்ப்பாயம் அறுதியிட்டு நம்புகிறது.

**7.** ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 65 AL 0099 என்ற வாகனத்திற்குரிய ஆய்வறிக்கையை பரிசீலிக்கையில் மேற்படி வாகனத்தின் முன்பகுதி முழுவதும் சேதாரம் அடைந்துள்ளது என்பதை இத்தீர்ப்பாயம் அறிந்து கொள்ள முடிகிறது. TN 65 AL 0099 என்ற கார் 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமானதாகும். TN 24 C 8989 என்ற 1ம் எதிர்மனுதாரருக்குரிய வாகனத்திற்குரிய ஆய்வறிக்கை ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.5 ஐ பரிசீலிக்கையில் மேற்படி வாகனத்தின் பின்பகுதியில் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை இத்தீர்ப்பாயம் அறிந்து கொள்ள முடிகிறது. எனவே 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான கார் 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான லாரியின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வருவதில் இத்தீர்ப்பாயத்திற்கு எவ்வித தயக்கமும் இடர்ப்பாடும் இல்லை.

**8.** ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள முகம்மது யூசுப்பின் சாட்சியத்திலிருந்து 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான லாரி சம்பவ இடத்தில் சென்று கொண்டிருந்ததா அல்லது நிறுத்தப்பட்டிருந்ததா என்ற முடிவுக்கு வர

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:20 +0530

இயலவில்லை. ஆனால் 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு நிறுவனமான 4ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான லாரி முறையான சமிக்ஞை விளக்குகள் போடாமல் நிறுத்தப்பட்டிருந்தால்தான் 3ம் எதிர்னுதாரர் வாகன ஓட்டுநர் 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்ற வாதத்தை முன்வைத்துள்ளார்.

**9.** விபத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் இரு வாகனங்களில் ஏற்பட்டுள்ள சேதாரத்தை கருத்தில் கொண்டும் விபத்து நடந்த இடத்தை கருத்தில் கொண்டும் நேரத்தை கருத்தில் கொண்டும் 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான லாரியின் மீது 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான கார் ஓட்டுநர் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று லாரியின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்ற முடிவுக்கு வருவதில் இத்தீர்ப்பாயத்திற்கு எவ்வித தயக்கமும் இடர்ப்பாடும் இல்லை.

**10.** விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரே காரணம் என்ற முடிவுக்கு வருகிறது. மேலும் 3ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு தன்னுடைய வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் காரணம் அல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் தன்னுடைய வாகனத்தை எவ்வித சமிக்ஞை விளக்குகளை போடாமல் நிறுத்தியதால்தான் பின்னால் மோத நேரிட்டதை உறுதிப்படுத்துவதற்கு முன்வரவில்லை என்பதால்தான் 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**11.** மேலும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி வாதிட்ட வழக்கறிஞர் தனது வாதத்தில் 3ம் எதிர்மனுதாரர் கார் ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் பரமக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் C.C.No.120/2022 என கோப்புக்கு எடுக்கப்பட்டு பின்னிட்டு 3ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் தனது

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:29 +0530

குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். எனவே விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரே காரணம் என்ற வாதத்தை உறுதிப்படுத்தும்விதமாக இவ்வழக்கு விபத்து நடந்துள்ள விதமும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் சேதாரங்களும் விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரே காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

12. <u>யார் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள்:</u>

3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்துள்தால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனமான 4ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளதா என இத்தீர்ப்பாயம் பரிசீலிக்கையில் 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 65 AL 0099 என்ற வாகனத்தை தன்னுடைய காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றோ அதனால் தங்கள் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றோ எதிருரையில் தெரிவிக்கவில்லை.

13. மேலும் 3ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான கார் 4ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் விதமாக ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை உறுதிப்படுத்தும்விதமாக மேற்படி வாகனத்தின் காப்பீடு நகலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே 4ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய இழப்பீடுத் தொகையை contract of indemnity என்ற அடிப்படையில் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டுள்ளார். 3ம் எதிர்மனுதாரரும் 4ம் எதிர்மனுதாரரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் மனுதாரர்களுக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என முடிவு செய்து இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:33 +0530

**14. <u>எவ்வளவு இழப்பீடு வழங்கத்தக்கது:</u>**

மனுதார்கள் தங்கள் மனுவில் விபத்தில் இறந்துபோன தங்கள் மகன் நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் துபாயில் உள்ள Amity University ல் BBA., LLB. படித்துள்ளார் என்றும் மேலும் 1ம் மனுதாரர் துபாயில் நடத்திவரும் அல்நஜிமா, அல்பரிதா நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்தார் என்றும் அந்த சமயத்தில் மாதம் ரூ.60,000/- சம்பாதித்து வந்தார் என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரமாக விபத்தில் இறந்த நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீனின் கடவுச் சீட்டை தாக்கல் செய்துள்ளனர். கடவுச் சீட்டை பரிசீலிக்கையில் மேற்படி அகமது நிஜாமுதீன் துபாய்க்குச் சென்று தங்கியுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் விபத்தில் இறந்த நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் துபாயில் அல்நஜிமா, அல்பரிதா நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்தார் என்பதற்கு மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சான்றாவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடவுச் சீட்டிலிருந்து விபத்தில் இறந்துபோன மனுதாரர்களின் மகனான நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் வயது 23 என முடிவுக்கு வருவதில் இத்தீர்ப்பாயத்திற்கு எவ்வித தயக்கமும் இடர்ப்பாடும் இல்லை.

**15.** ஆனால் அதே சமயத்தில் விபத்து நடந்த சமயத்தில் இறந்த நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் மாதம் ரூ.60,000/- சம்பாதித்து வந்தார் என்பதற்கு மனுதார்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. எனவே விபத்தில் இறந்த நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் துபாயில் உள்ள Amity University ல் BBA., LLB. படித்துள்ளார் என்பதை கவனத்தில் கொண்டு பரிசீலிக்கும்போது அவருக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை மே 2023 வரை செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் விபத்து நடந்த கால கட்டத்தில் அவர் கல்லூரி மாணவனாக இருந்து வந்துள்ளார் என்ற முடிவுக்கு வருவதில் இத்தீர்ப்பாயத்திற்கு எவ்வித தயக்கமும் இடர்ப்பாடும் எழவில்லை. கல்லூரி மாணவர் என எடுத்துக்கொண்டாலும் விபத்தில் இறந்த நபர் விபத்து

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:40 +0530

ஏற்படாமல் உயிரோடு இருக்கும்பட்சத்தில் மாதம் குறைந்தபட்சம் ரூ.25,000/- வரை சம்பாதித்திருக்க வாய்ப்புள்ளதால் அவரது மாத வருமானம் தோராயமாக ரூ.25,000/- என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**16.** இறந்துபோன நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் வயது 23 என்பதையும் அவரது மாத வருமானம் ரூ.25,000/- என நிர்ணயித்துள்ளதை கருத்தில் கொண்டும், **நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி எதிர் பிரணாய் சேத்தி (2017 (2) TNMAC 609) (SC)** என்ற வழக்கில் வழங்கப்பட்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீனின் எதிர்கால ஊதியத்தை நிர்ணயம் செய்ய 40% கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் ரூ.25000 + 10000 = ரூ.35,000/-ஐ நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீனின் மாத வருமானமாக இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

**17. சரளா வர்மா எதிர் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேசன் (2009 (2) TNMAC 1) (SCC)** என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் இறக்கும்போது 23 வயதுடையவர் என்பதாலும் அவரைச் சார்ந்து இரண்டு மனுதாரர்கள் இருப்பதாலும் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்பதாலும், அவருடைய வருமானத்தில் அவரது சொந்த செலவிற்காக 1/2 பாகம் எடுத்தது போக மீதி 1/2 பாகத்தை தன்னுடைய குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று கருதி அதன் அடிப்படையில் ரூ.35,000 - ரூ.17,500 = ரூ.17,500/-ஐ நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் தனது குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று தீர்மானிக்கப்படுகிறது. சரளா வர்மா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் நிஜாமுதீன் என்ற அகமது நிஜாமுதீன் வயது 23 என்பதை கருத்தில் கொண்டு 18 பெருக்கல் குறியீட்டை இந்த தீர்ப்பாயம் கணக்கில் கொண்டு, வருமான நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்கிறது. அந்த அடிப்படையில் ரூ.17,500 x 12 x 18 = ரூ.37,80,000/- வருமான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:45 +0530

**18.** பிரணாய் சேத்தி வழக்கில், சொத்து இழப்பு, அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்பு மற்றும் இறுதிச்சடங்கு செலவுகள் போன்ற வழக்கமான தலைப்புகளை ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் 10% வீதத்தில் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இவ்வழக்கு விபத்து 2021 ஆம் ஆண்டு நடந்துள்ளது. எனவே, சொத்து இழப்பு, அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்பு மற்றும் இறுதிச்சடங்கு செலவுகள் என்ற தலைப்பின் கீழ் அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்புக்கு ரூ.44,000/- ஆகவும், இறுதிச்சடங்கு செலவுகள் மற்றும் உடைமை இழப்புக்கு தலா ரூ.16,500/- ஆகவும் இழப்பீடு மதிப்பிடப்பட்டுள்ளது.

**19.** மேற்படி இழப்பீட்டுத்தொகை மனுதாரர்களுக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் கீழ்க்கண்டவாறு இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

| | |
|---|---|
| வருமான இழப்பு | ரூ. 37,80,000 |
| 1 மற்றும் 2 மனுதாரர்களுக்கு அன்பு மற்றும் பாசம் இழப்பு | ரூ. 44,000 |
| ஈமக்கிரியை செலவு | ரூ. 16,500 |
| உடைமைகள் இழப்பு | ரூ. 16,500 |
| மொத்தம் | ரூ. 38,57,000/- |

மேற்படி 1 மற்றும் 2 மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையான **ரூ.38,57,000/-**ல் ஒட்டு மொத்த நியாயமான இழப்பீடாக கிடைக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,**

**1.** இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது,

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:51 +0530

**2.** 1 மற்றும் 2 மனுதாரர்களுக்கு 4ம் எதிர்மனுதாரர் ஒட்டுமொத்த இழப்பீடாக **ரூ.38,57,000/-மும்**, அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை வருடத்திற்கு 7.5% வட்டியுடன் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மெய்நிகர் கணக்கு (Virtual Account) எண். ADJRMD152023 (IFSC.No. SBIN0004266)-ல் வைப்பீடு செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. (Excluding default period if any)

**3.** மேற்படி இழப்பீட்டுத்தொகையில் 1, 2 மனுதாரர்கள் தலா **ரூ.19,28,500/-** கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**4.** 4ம் எதிர்மனுதாரர் மேற்படி இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பின்னர் மனுதாரர்கள் அவர்களது பங்குத்தொகையுடன் வட்டி மற்றும் செலவுத்தொகை ஆகியவற்றை உடனடியாக பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

**5.** மனுதாரர்கள் செலுத்திய நீதிமன்ற கட்டணம் போக இழப்பீடு தொகைக்குரிய மீதமுள்ள நீதிமன்றக் கட்டணத்தை இவ்வுத்தரவு தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றக் கட்டணம் முழுவதையும் செலுத்தும் தேதிவரை இழப்பீட்டு தொகைக்கு மனுதாரர்கள் வட்டி பெறத்தக்கவர்கள் அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது.

**6.** வழக்குரைஞர் ஊதியம் **ரூ.58,070/-** என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

**7.** 1, 2 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:23:58 +0530

**மனுதாரர்கள் தரப்பு செலவுத்தொகைப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 37942 50 | |
| வக்காலத்து செலவு | ரூ. 10 00 | |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 58070 00 | |
| மொத்தம் | **ரூ. 96022 50** | முழுமையாக **ரூ.96,023/-** |

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள் என்னால் திறந்த இத்தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:24:16 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> :**

ம.சா.1 – திரு. அபுல்கலாம்
ம.சா.2 – திரு. முகம்மது யூசுப்

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | பார்வை மகசர் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | வரைபடம் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | பிரேத பரிசோதனை அறிக்கை | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.5 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 24 C 8989) | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.6 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.7 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் | புகைப்பட நகல் |

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:24:23 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.8 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.9 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 65 AL 0099) | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.10 | 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.11 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.12 | இறப்புச் சான்றிதழ் | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.13 | 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.14 | இறந்த நபரின் ஆதார் அடையாள அட்டை | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.15 | இறந்த நபர் துபாய் நாட்டில் படித்ததற்கான அடையாள அட்டை | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.16 | இறந்த நபரின் கடவுச் சீட்டு | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.17 | 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.18 | 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | புகைப்பட நகல் |
| ம.சா.ஆ.19 | குற்ற இறுதி அறிக்கை | உண்மை நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> :**

எ.ம.சா.1 – திரு. பன்னீர் செல்வம்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> :**

எ.ம.சா.ஆ.1 – குற்ற இறுதி அறிக்கை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.06.25 18:24:29 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**இராமநாதபுரம்.**